# ஒரு மாற்றத்திற்கான பயணம்

புலம்பெயர் தொழிலாளர்கள் பாதுகாப்பிற்கான
2010-2024



சுவிட்சர்லாந்து அரசாங்கம் தொழிலாளர் புலம்பெயர்வு மற்றும் அதன் அபிவிருத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியமைக்காக நீண்டகாலமாக அங்கிகரிக்கப்பட்டு வருவதுடன் இம் முக்கியத்துவமிக்க துறையின் தரப்படுத்தலுக்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது. அத்துடன் 2010ல் Swiss Agency for Development and Cooperation (SDC) இலங்கைக்கு புலம்பெயர் தொழிலாளர்கள் பாதுகாப்பிற்கான நிகழ்ச்சித்திட்டத்தினை (SLMP) முன்னெடுத்தது. பல பங்குதாரர்கள் ஒத்துழைப்புடன் மற்றும் புத்தாக்க அனுகுமுறையினூடாக இந்நிகழ்ச்சித்திட்டம் இலங்கையில் தொழிலாளர் புலம்பெயர்வினை குறிப்பிடத்தக்களவு மறுசீரமைத்துள்ளதுடன் அதனூடாக பாதுகாப்பான மற்றும் நியாயமான, மட்டுமின்றி புலம்பெயர் சேவை வழங்குனர்கள் மற்றும் பரந்த சமூகத்திற்கு பரஸ்பரம் அனுகூலமானதென உறுதி செய்கின்றது.

## நிகழ்ச்சித்திட்டத்தைப் பற்றி

புலம்பெயர் தொழிலாளர்கள் பாதுகாப்பிற்கான நிகழ்ச்சித்திட்டம் என்பது தொழிலாளர் புலப்பெயர்வினை மறுசீரமைப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஓர் பரந்தளவிலான ஆரம்பமாகும். அது பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது:



## முக்கிய சாதனைகள்:

இந்நிகழ்ச்சித்திட்டம் குறிப்பிடத்தக்க சீர்த்திருத்தங்களுக்கும் நேரடி தாக்கங்களுக்கும் வித்திட்டுள்ளது.

- **கொள்கை சீர்த்திருத்தங்கள்:** புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற தேசிய கொள்கைகளை வடிவமைத்தல், பிராந்தியத்தில் பரந்தளவு புலப்பெயர்வு கொள்கைகளுக்காக அழுத்தங்களை கொடுத்தல்.

- **நெறிமுறை ஆட்சேர்ப்பு:** 1,000 ற்கும் அதிகமான முகவர் அமைப்புக்கள் நெறிமுறை பயிற்சிகளை பின்பற்றி சுரண்டலை குறைக்கின்றன.

- **சமூக பிரவேசம்:** இந்நிகழ்ச்சித்திட்டம் 250,000 ற்கும் அதிகமான குடும்பங்களுக்கு புலம்பெயர் சேவை நிலையங்களினூடாகவும் சமூக முயற்சிகளுடாகவும் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது.

- **திறன் வளர்ச்சி:** நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அனைத்து மட்டத்திலான நிர்வாகம், ஆயிரத்திற்குமதிகமான புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது வேலை வாய்ப்புக்களை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியுள்ளது.

- ***வழிகாட்டல் மற்றும் பயிற்சி:*** **127,000** ற்கும் அதிகமான எதிர்கால புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சட்டரீதியான மற்றும் சமூக உளவியல் பற்றிய ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொடுத்தல்.

- ***பயிற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்:*** புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஒத்துழைப்பு முறைமையினை பலப்படுத்துவதற்காக **70** சதவீதமான உத்தியோகத்தர்கள் பயிற்றப்பட்டுள்ளனர்.

- **COVID-19:** புலம்பெயர் தொழிலாளர் அமைப்புக்களுடாக பாதிக்கப்பட்ட **6,000** ற்கும் அதிகமான குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

- ***கவலைகளுக்கான தீர்வு:*** **95** சதவீதமான கவலைகள் வெற்றிகரமாக தீர்க்கப்பட்டுள்ளன.

- ***வழிகாட்டல் மற்றும் திறன் விருத்தி:*** **1,100** ற்கும் அதிகமான புலம்பெயர் தொழிலாளர்கள் வழிகாட்டல்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

- ***புலம்பெயர் தகவல் நிலையங்கள்:*** புலம்பெயர் தகவல்களை ெற்றுக் கொள்வதற்கு ஏதுவான வகையில் பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

- ***சமூக ஊடாட்டங்கள்:*** **158** புலம்பெயர் தொழிலாளர் அமைப்புக்கள் **3,400** செயற்பாட்டு உறுப்பினர்களுடன் இணைந்து செயல்படுகின்றன.



# அடிப்படை கொள்கையினை ஸ்தாபித்தல்

## கட்டம் 1 2010-2013

## இலக்கு:

தொழிலாளர் புலம்பெயர்வுக்காக வலுவான கட்டமைப்பை உருவாக்குதல்.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் Helvetas உடன் இணைந்து அடிப்படை கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

- புலம்பெயர் தொடர்பான சவால்களுக்கு முகம் கொடுப்பதற்காக தேசிய மற்றும் சமூக மட்டத்தில் தலையீடுகளை மேற்கொண்டுள்ளது.

- எதிர்கால மறுசீரமைப்புகளுக்காக பின்னணியினை தயாரித்து நெறிமுறை சார்ந்த ஆட்சேர்ப்பு கோட்பாட்டினை அறிமுகம் செய்துள்ளது.



## தருணத்தை கட்டியெழுப்புதல்

## கட்டம் 2 2013-2016

### இலக்கு:

திட்டத்தை பரவலாக்கல் மற்றும் ஆட்சேர்ப்பு பின்பற்றல்களை பலப்படுத்தல்.

- கிராமிய மட்ட புலம்பெயர் ஒத்துழைப்பு சேவைகளை ஆரம்பித்தல் மற்றும் பலப்படுத்துவதற்காக உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களுடன் கைக்கோர்த்துக் கொண்டுள்ளது.

- 1,000ற்கும் அதிகமான உறுதி பத்திரமுடையவர்களை இணைத்துக் கொள்ளும் முகவரமைப்புக்களுக்கிடையில் நெறிசார்ந்த பின்பற்றல்கள் தொடர்பாக அறிவூட்டல்.

- தேசிய மற்றும் பிராந்திய கொள்கைகள் மீது அழுத்தங்களை பிரயோகித்து ஆட்சேர்ப்புக்களுக்காக அங்கிகரிக்கப்பட்ட செயற்பாட்டு முறைமை தயாரித்து (SOP) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



# விளைவுகளை விரிவுபடுத்தல்

## கட்டம் 3 2016-2020

### இலக்கு:

திட்டத்தை விரிவுபடுத்தல் மற்றும் புலம்பெயர் சேவைகளை மேம்படுத்தல்.

- 250 000ற்கும் அதிகமான குடும்பங்கள் நன்மை பெறும் வகையில் நாடளாவிய ரீதியில் புலம்பெயர் சேவை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
- அரசு, சிவில் சமூக அமைப்புக்கள் (CSO) மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் தொடர்பான அனுகுமுறை மேம்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

.



## பலப்படுத்தல் மற்றும் புத்தாக்கம்

**கட்டம் 4 2021-2024**

### இலக்கு:

SLMP ஊடான புரிதல் மற்றும் அனுபவங்களை தேசிய கட்டமைப்புக்குள் உள்ளடக்கிய எதிர்காலத்திற்கான புத்தாக்கம்.

- இலங்கையில் வேலைவாய்ப்புக்களுக்காக புலம்பெயர் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டு திட்டத்திற்கான அமைச்சரவை அங்கிகாரம் (2023).
- திறன் கடவுச்சீட்டு மற்றும் (e-RPL) தளத்தினை அறிமுகம் செய்துள்ளதுடன் 6,400 புலம்பெயர்ந்தோருக்கு பயன்களை பெற்றுக் கொடுத்துள்ளது.
- புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பினை மேம்படுத்தி அவசர வெளியேற்றல் மற்றும் பதிலளிக்கும் திட்டம் (EERP) மற்றும் அவசர டிஜிட்டல் தளத்தினை அறிமுகம் செய்துள்ளது.
- திறன் விருத்தி, நியாமான ஆட்சேர்ப்பு பின்பற்றல் மற்றும் கிராமிய மட்ட இணைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பாக தொடர்ச்சியாக அவதானம் செலுத்தல்.
- தெற்காசிய தகைமைகளை முன்வைக்கும் கட்டமைப்பை (SAQRF) தேசிய கொள்கையுடன் ஒன்றிணைத்தல்.

# 25 மாவட்டங்களில் 13 மாவட்டங்களுக்கு பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்வு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக SDC உதவியுள்ளது.

**பாதுகாப்பான புலம்பெயர்வு முறைகள் தொடர்பான விழிப்புணர்வு**
- ஆண் பங்குபற்றுனர்கள்: 1,454
- பெண் பங்குபற்றுனர்கள்: 5,532
- மொத்த பங்குபற்றுனர்கள்: 6,986

**கவலையான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன**
- ஆண் பங்குபற்றுனர்கள்: 101
- பெண் பங்குபற்றுனர்கள்: 512
- மொத்த பங்குபற்றுனர்கள்: 613

**கவலையான விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளன**
- ஆண் பங்குபற்றுனர்கள்: 36
- பெண் பங்குபற்றுனர்கள்: 170
- மொத்த பங்குபற்றுனர்கள்: 206

**புலம்பெயர் தொழிலாளர் சங்கங்களின் செயல்பாடு**
- நிகழ்வுகள்: 130
- ஆண் பங்குபற்றுனர்கள்: 20
- பெண் பங்குபற்றுனர்கள்: 148
- மொத்த பங்குபற்றுனர்கள்: 168

**சுய உதவி குழுக்களின் செயல்பாடு**
- நிகழ்வுகள்: 367
- ஆண் பங்குபற்றுனர்கள்: 70
- பெண் பங்குபற்றுனர்கள்: 642
- மொத்த பங்குபற்றுனர்கள்: 712

**இயல்பான தலைவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்**
- ஆண் பங்குபற்றுனர்கள்: 24
- பெண் பங்குபற்றுனர்கள்: 446
- மொத்த பங்குபற்றுனர்கள்: 470

**திறன்கள் விருத்தி முன்முனைப்பு**
- ஆண் பங்குபற்றுனர்கள்: 108
- பெண் பங்குபற்றுனர்கள்: 369
- மொத்த பங்குபற்றுனர்கள்: 477



**149** வர்த்தகங்கள்/வருமாணம் ஈட்டும் வழி முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது

**42** புலம்பெயர் உரிமைகள் மற்றும் ஆலோசனை பரப்புரை

**17** புலம்பெயர் சேவை நிலையங்கள் மற்றும் பிராந்திய ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

**Embassy of Switzerland to Sri Lanka and the Maldives**

பாதுகாப்பான புலம்பெயர்வு நிகழ்ச்சி திட்டத்தினூடாக புலப்பெயர்வு மற்றும் அதன் அபிவிருத்திக்காக சுவிட்சர்லாந்தின் தலைமைத்துவம் மற்றும் புதிய பிரவேசங்களை புத்தாக்கம் செய்கின்றது. ஒத்துழைப்பினை அதிகரித்தல், நெறிமுறை சார்ந்த பின்பற்றல்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் நன்மை கருதி அக்கறை கொள்வதுடன் இந்நிகழ்ச்சித் திட்டம் இலங்கையில் தொழிலாளர் புலப்பெயர்வு தொடர்பாக புதிய தரப்படுத்தலை அறிமுகம் செய்துள்ளது. தொடர்ச்சியாக நாம் இவ் வெற்றிகளை கட்டியெழுப்புவதினூடாக புலம்பெயர் தொழிலாளர்களினதும் மற்றும் அவர்களது குடும்பங்களினதும் பிரகாசமான எதிர்காலம் பாதுகாக்கப்படுவதனை எதிர்ப்பார்க்கின்றோம்.

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

**Embassy of Switzerland to Sri Lanka and the Maldives**